இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 221 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 09 – திங்கட் கிழமை 23 மார்ச் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 221 : Thiruvalluvar Year - 2057 - Panguni 09 - Monday 23 March 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00



## தமிழ்நாட்டின் வளர்ச்சி முழுமையடைய – அடுத்த 5 ஆண்டுகளும்

# ‘திராவிட மாடல்’ அரசு தொடர வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!



**சென்னை. மார்ச் 23 -**

**“தமிழ்நாட்டின் வளர்ச்சி முழுமையடைய அடுத்த ஐந்தாண்டுகளும் ‘திராவிட மாடல்’ அரசு தொடர வேண்டும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டிருப்பதாவது:-

அடுத்த 5 ஆண்டுகளில், துறை வாரியாக நான் நிர்ணயித்துள்ள வளர்ச்சி இலக்குகளை Stalin Statement என்ற பெயரில் வெளியிட்டிருந்தேன். இவற்றை அடையவும், தமிழ்நாடு வெல்லவும் தி.மு.க.வுக்கு வாக்களிக்க வேண்டும்.




ஊரக வளர்ச்சித் துறை சார்பில் உத்தமர் காந்தி மாதிரி கிராமங்கள் திட்டம்!

தொழில்துறை சார்பில் 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!

கால்நடை – பால்வளம் மற்றும் மீன்வளத் துறை சார்பில் பால் உற்பத்தி உயர்வு – மீனவர்கள் வாழ்வு மேம்பாடு!

நகராட்சி நிருவாகத் துறை சார்பில் உட்கட்டமைப்பில் உலகளவில் உயரும் நம் நகரங்கள்!

சிறு – குறு நடுத்தரத் தொழில் துறை சார்பில், 5 சிறப்புத் தொழில் குழுமங்கள் அமைக்கப்படும்!

நெடுஞ்சாலைத் துறை சார்பில் பாதுகாப்பான நவீன சாலை தொழில்நுட்பம்!

கைத்தறி மற்றும் ஜவுளித்துறை சார்பில் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சிறப்பான திட்டங்கள்!

வீட்டு வசதித்துறையின் சார்பில் கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் சேர்த்து 7 லட்சம் வீடுகள் கட்டித்தரப்படும்!

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் தேவைப்படும் அனைவருக்கும் போதிய மருத்துவக் காப்பீடு!

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் சாகுபடி பரப்பு அதிகரிக்கப்படும்!

பள்ளிக்கல்வித்துறை சார்பில் ஸ்மார்ட் கிளாஸ் ரூம், லைப்ரரி 5.0, வெற்றிப்பள்ளிகள் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள்!

உயர்கல்வித்துறை சார்பில் நான் முதல்வன் 2.0 திட்டம் உள்ளிட்ட திட்டங்கள்!

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பொருளாதார முன்னேற்றம்!

ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் ஒவ்வொருவருக்கும் வீட்டுமனைப் பட்டா!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

## மேற்குவங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி!

### மம்தா பானர்ஜி குற்றச்சாட்டு!



கொல்கத்தா, மார்ச் 23 -

மேற்குவங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த மோடி முயற்சிப்பதாக, அம்மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி குற்றம் சாட்டியுள்ளார்.

கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேற்குவங்கத்தில் S.I.R. மூலம் பல்லாயிரக்கணக்கான வாக்காளர்களின் பெயர்களை தேர்தல் ஆணையம் நீக்கியுள்ளதாக குற்றம்சாட்டினார். இதற்கு எதிராக கொல்கத்தா உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தில் தாம் வழக்கு தொடர்ந்ததை சுட்டிக்காட்டிய மம்தா பானர்ஜி, நீதிமன்றம் மூலம் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என நம்புவதாக கூறினார்.

மேற்குவங்கத்தில் உள்ள அனைத்து சமுக மக்களுடன் தாம் இருப்பேன் என்றும், அவர்களை ஒரு போதும் கைவிடமாட்டேன் என்றும் தெரிவித்தார்.

மேற்குவங்கத்தின் உரிமைகளை பறிக்க விடமாட்டேன் என்றும், அநீதிக்கு எதிராக தொடர்ந்து போராடுவேன் என்றும் கூறியுள்ளார். தங்களிடம் இருக்கும் அதிகாரம் மூலம் மேற்குவங்கத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்த மோடி முயற்சிப்பதாகவும் குற்றம்சாட்டினார்.

### குஜராத்தில்

## அரசுப் பள்ளிகள் மூடல்!

### மோடியின் சொந்த மாநிலத்தில் அவலம்!

பரோடா, மார்ச் 23 -

குஜராத் மாநிலத்தில் அரசு தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகள் வகுப்பறைப் பற்றாக்குறையால் தத்தளிப்பது அரசின் புள்ளி விபரங்கள் மூலம் அம்பலமாகியுள்ளது.

குஜராத் சட்டப் பேரவையில் காங்கிரஸ் உறுப்பினர் எழுப்பிய கேள்விக்கு அம்மாநில பா.ஜ.க. அரசு எழுத்துப்பூர்வமாக பதில் அளித்துள்ளது. அதில், குஜராத் மாநிலம் முழுவதும் 9 ஆயிரத்து, 442 வகுப்பறைகள் பற்றாக்குறையாக உள்ளதை பா.ஜ.க. அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

இதில், 32 மாவட்டங்களில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகளில் 8 ஆயிரத்து, 586 வகுப்பறைகளும், மேல்நிலைப் பள்ளிகளில் 856 வகுப்பறைகளும் அடங்கும். இதில் குறிப்பிடத்தக்க வகையில் பனஸ்கந்தா மாவட்டத்தில் மட்டும் 1,140 தொடக்கப் பள்ளியில் வகுப்பறைகள் இல்லாத நிலை உள்ளது.

சோட்டா உதேபூரில் 577 வகுப்பறைகளும், பஞ்ச மஹால் பகுதியில் 569 வகுப்பறைகளும், கட்ச் பகுதியில் 553 மற்றும் டா பகுதியில் 524 வகுப்பறைகள் என குஜராத் மாநிலம் முழுவதும் மொத்தம் 9 ஆயிரத்து 442 வகுப்பறைகள் பற்றாக்குறை நிலவுகிறது.

2026 ஜனவரி 21ஆம் தேதி நிலவரப்படி குஜராத் அரசுப்பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. மேலும், மாணவர் சேர்க்கை இல்லாததன் காரணமாக, கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 75 அரசு தொடக்கப் பள்ளிகள் மூடப்பட்டுள்ளதாக குஜராத் அரசு தெரிவித்துள்ளது.

# நாடு முழுவதும் கடும் ‘கியாஸ்’ தட்டுப்பாடு!

### மக்கள் அவதி! தொழில்கள் பாதிப்பு!

புதுடெல்லி, மார்ச் 23 -

சமையல் காஸ் தட்டுப்பாடு நீடிப்பதால் நாடு முழுவதும் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. முன்பதிவு செய்து பல நாட்கள் கடந்தும் சப்ளை இல்லாததால் மக்கள் அவதிக்கு உள்ளாகி உள்ளனர். ஈரான் போரால் சமையல் காஸ் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வர்த்தக காஸ் சப்ளை ரத்து செய்யப்பட்டது.

இதனால் ஓட்டல்கள், தொழில்நிறுவனங்கள் அடியோடு பாதிக்கப்பட்டுள்ளன. வீட்டு சமையல் காஸ் சிலிண்டர் சப்ளையும் தற்போது முடங்கி உள்ளது. முன்பதிவு செய்து பல நாட்கள் கடந்தும் சிலிண்டர் சப்ளை இல்லாததால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து 3வது வாரமாக இந்த பாதிப்பு நீடித்து வருகிறது. இந்தியாவின் 60 சதவீத காஸ், கச்சா எண்ணெய் இறக்குமதிகளைப் பெறும் முக்கிய கப்பல் போக்குவரத்துப் பாதையான ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியதால் இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் பயந்து போன மக்கள் பீதி அடைந்து சமையல் காஸ் முன்பதிவு செய்தனர். கடந்த மார்ச் 13 அன்று முன்பதிவு 87.7 லட்சமாக உச்சத்தை எட்டியது, ஆனால் அதன்பிறகு மெதுவாக குறைந்தது. மார்ச் 19 அன்று சுமார் 55 லட்சம் முன்பதிவுகள் செய்யப்பட்டன. போருக்கு முந்தைய காலத்தில் ஒரு நாளுக்கான சராசரி முன்பதிவு 5055 லட்சமாக இருந்தது. அந்த நிலையை தற்போது எட்டியுள்ளது. இருப்பினும் எல்பிஜி விநியோக நிலைமை கவலையளிப்பதாகவே உள்ளது. ஆனால் எந்தவொரு எல்பிஜி விநியோகஸ்தரிடமும் தட்டுப்பாடு இல்லை. கடந்த வாரத்தில், 11,300 டன் வர்த்தக எல்பிஜி வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

கடந்த இரண்டு வாரங்களில் உள்நாட்டு எல்பிஜி உற்பத்தி 40 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது. 3 பொதுத்துறை எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களும் போருக்கு முந்தைய கால அளவிலான தினசரி எல்பிஜி விநியோகங்களைச் செய்து வருகின்றன.

இதனால் எல்பிஜி சிலிண்டர் விநியோகம் வழக்கம் போல் தொடர்கிறது. கள்ளச்சந்தை மற்றும் பதுக்கலைக் கட்டுப்படுத்த, சோதனைகளும் திடீர் ஆய்வுகளும் தொடர்கின்றன.

நேற்று மட்டும் 4,500 சோதனைகள் நடத்தப்பட்டன, அதே நேரத்தில் எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல் நிலையங்கள் மற்றும் எல்பிஜி விநியோகஸ்தர்களிடம் 1,800 திடீர் ஆய்வுகளை மேற்கொண்டன. கண்காணிப்பு மற்றும் அமலாக்கத்தை அமைக்குமாறு மாநில அரசுகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

இருப்பினும் நிலைமை இன்னும் கவலையளிப்பதாக உள்ளது.

எனவே முன்பதிவு செய்த பிறகு, தங்களின் சிலிண்டர் வருகைக் காக பொதுமக்கள் உரிய காலம் வரும் வரை காத்திருக்க ஒன்றிய அரசு வலியுறுத்தி உள்ளது.

மேலும் சமையல் எரிவாயுவான எல்பிஜி மீதான அழுத்தத்தைக் குறைக்க மக்கள் மாற்று எரிபொருட்களையும் ஆராய வேண்டும் என்று தெரிவித்துள்ளது. வாடிக்கையாளர்கள் குழாய்வழி இயற்கை எரிவாயுவிற்கு மாற வேண்டும். இதுவரை புதியதாக 13,700 குழாய் இயற்கை எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 7,000 நுகர்வோர் எல்பிஜியிலிருந்து குழாய்வழி இயற்கை எரிவாயுவிற்கு மாறியுள்ளனர் என்று ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

### தமிழ்நாட்டில்

## பெண் தொழில் முனைவோர் எண்ணிக்கை உயர்வு!

### ஒன்றிய அரசு தகவல்!

**சென்னை, மார்ச் 23 -**

**தமிழ்நாட்டில், கடந்த 5 ஆண்டு திராவிட மாடல் ஆட்சியில் சிறு, குறு மற்றும் நடுத்தர பெண் தொழில்முனைவோர் எண்ணிக்கை 5 மடங்கு அதிகரித்துள்ளது, ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள தரவுகள் மூலம் தெரிய வந்துள்ளது.**

2024-2025 நிதியாண்டில், பெண்கள் நடத்தும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தரவரிசையில், தமிழ்நாடு கடந்த 5 ஆண்டுகளில் 7 மடங்கு உயர்ந்து, இரண்டாம் இடம் பிடித்துள்ளது. ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகம் வெளியிட் டுள்ள தரவுகளின்படி, தமிழ்நாட்டில் கடந்த 2021-22ம் நிதியாண்டில் சிறு, குறு மற்றும் நடுத்தர பெண் தொழில்முனைவோரின் எண்ணிக்கை, ஒரு லட்சத்து 26 ஆயிரமாக இருந்தது.

இந்த எண்ணிக்கை கடந்த 5 ஆண்டுகளில் 7 மடங்கு உயர்ந்து, 2024-2025ம் நிதியாண்டில், 9 லட்சத்து 4 ஆயிரமாக உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பா.ஜ.க. ஆளும் குஜராத் மாநிலத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தர பெண் தொழில்முனைவோரின் எண்ணிக்கை 2.18 லட்சமாகவும், ராஜஸ்தான் மாநிலத்தில், 3.36 லட்சமாகவும் உள்ளன.

கடந்த 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் எண்ணிக்கையில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக முன்னேறியுள்ளதாக ஒன்றிய அரசின் தரவுகள் மூலம் தெரிய வந்துள்ளது.



## உரிமைகளைக் காத்து, வளர்ச்சியை மேலும் முன்னெடுக்க வெல்வோம் ஒன்றாக!